*கவனிக்க.- 2019.06.14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*
*கவனிக்க.-இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் 2019 ஆம் ஆண்டிற்கான பொலநறுவை மாவட்டத்திற்குரிய நீதாசன வலயங்களின் யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் பிரசுரிக்கப்படுகின்றது.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2129 - 2019 ජූනි මස 21 වැනි සිකුරාදා - 2019.06.21**
*2129 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு யூன் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1464 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1481 |


**கவனிக்க.-** (i) குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்) சட்டமூலம் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) உயர்கல்வி (தர உறுதிப்பாடு மற்றும் தராதர அங்கீகாரம்) சட்டமூலம் 2019, யூன் மாதம் 14 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2019, யூலை மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2019, யூன் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2019 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


*1461-B 81534-5,403 (2019/05)*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலும்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவையாற்றும்படி கேட்கப்படலும்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலும்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலுாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலும். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலும். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலுாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

*எல்லூப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.*

(i) *முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;*

(ii) *ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;*

(iii) *ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;*

(iv) *சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;*

(v) *ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப்படுவர் ;*

(vi) *பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.*

*பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.*

*1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.*

*2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.*

*3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.*

*5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.*

*6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.*

*7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலூம்.*

*8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லூமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.*

*9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.*

*10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லூமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.*

*11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.*

*12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.*

*13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.*

*14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.*

*15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.*

*16. பரீட்சார்த்தியல்லூத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லூத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.*

*பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்*

(i) *ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.*

(ii) *ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லூவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.*

(iii) *நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.*

(iv) *சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.*

(v) *சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.*

(vi) *விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.*

(vii) *உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.*

(viii) *எல்லூ விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.*

(ix) *ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலூல் கட்டுதல் வேண்டும்.*

(x) *வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.*

(xi) *உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.*

(xii) *மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.*

*பரீட்சை ஆணையாளர் நாயகம்.*

*இலங்கை பரீட்சைத் திணைக்களம்,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை.*

# பதவிகள் - வெற்றிடம்

## இலங்கைப் பொலிஸ்

பொலிஸ் உதவிச் சேவை சேமப்படை உப பொலிஸ் பரிசோதகர் (தாதி உத்தியோகத்தர்) மற்றும் சேமப்படை பெண் உப பொலிஸ் பரிசோதகர் (தாதி உத்தியோகத்தர்)

இலங்கைப் பொலிஸில் சேமப்படை தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் (தாதி) மற்றும் சேமப்படை தகுதிகாண் பெண் உப பொலிஸ் பரிசோதகர் (தாதி) பதவிகளுக்கான இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

02. பின்வரும் படிவத்திற்கமைய பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு)/ பயிலுநர் ஆட்சேர்ப்பு பிரிவு, இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் தங்களால் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2019.08.22 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும். தாமதித்துப் பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பப்படிவங்கள் வழங்கப்படமாட்டாது.

03. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 32,790 - 7 × 370 - 2 × 495 - 25 × 660 - ரூபா 52,870.00.

2016.01.01 ஆந் திகதியிலிருந்து பொது நிர்வாக சுற்றறிக்கையின் இலக்கம் 3-2016 இன் II ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு செலுத்தப்படும். இச்சம்பள அளவுத் திட்டமானது 2020.01.01 ஆந் திகதி முழுமையாக நடைமுறைப்படுத்தப்படும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை இலக்கம் 2416/2013 இன் கீழ் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவர்களாவர். மேற்குறிப்பிடப்பட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

(அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : ரூபா 7,800 ;

(ஆ) பொ. நி. சு. இல. 03/ 2016 இற்கு அமைய அடிப்படை சம்பளத்தில் 40% கொடுப்பனவாக குறிப்பிடப்பட்ட பதவிக்கு வழங்கப்படும் ரூபா 11,760.00

(இ) சீருடைகளைச் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250 ;

(ஈ) கடினக் கொடுப்பனவுகள் : ரூபா 2,000 ;

(உ) இணைந்த கொடுப்பனவுகள் : ரூபா 12,000.00 (ஆகக்கூடிய) (விசேட கொடுப்பனவுகள் வழங்கும் பிரதேசங்கள்)
ரூபா 11,200.00 (ஆகக்கூடிய) (விசேட கொடுப்பனவுகள் வழங்காத பிரதேசங்கள்)

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக** :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதிகள் (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளைப் பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) குடும்பத்தினருக்கும் இலவச வைத்திய வசதிகள் கிடைத்தல் ;

(ஈ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(உ) தனது விளையாட்டுத் திறமை மற்றும் இயல்பான திறமைகளை மேம்படுத்திக் கொள்வதற்கான வசதிகள் ;

(ஊ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் கடின உழைப்புக்காகவும் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(எ) திறமைகளின் படி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பாடகற்கை நெறிகளைக் கற்பதற்கான வாய்ப்புக்கள் உரித்தாகும்.

04. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

(அ) **வயதெல்லை.-** வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்பப்படிவங்களை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதியன்று 18-30 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். எனினும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்கையில் தற்போது பொலிஸ் சேவையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான அதிகபட்ச வயதெல்லை 35 ஆகும்.

(ஆ) **கல்வித் தகைமைகள்.-**

* க.பொ.த. (சா. தர) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி, கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஆங்கிலம் உட்பட 04 பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் 6 பாடங்கள் ஒரே முறையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். மற்றும்

* க. பொ. த. (உ.தர) பரீட்சையில் ஒரே முறையில் 03 பாடங்கள் சித்தியடைந்திருத்தல் (உயிரியல், விவசாய அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் அல்லது ஏதேனும் ஒரு பாடத்தில் சித்தியடைந்திருத்தல்).

**குறிப்பு 1.-** இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாட வகைப்பாட்டிற்கமைய பாட இலக்கங்கள் 41, 44 கொண்ட இரு விஞ்ஞான பாடங்களை ஒரு பாடமாகவும், இல. 42 மற்றும் இலக்கம் 45 ஐக் கொண்ட இரு கணித பாடங்களை ஒரு பாடமாகவும் கருதி பரீட்சையில் சித்தியடைந்த பாட எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2.-** க. பொ. த. (சா. தர) பரீட்சையில் தொழில்நுட்ப பாட எழுத்துப் பரீட்சையில் சித்தியடையாமையானது அப்பாடத்தின் செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பினும் அப்பாடத்தில் சித்தியடையவில்லை என்றே கருதப்படும்.

**குறிப்பு 3.-** விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடப்பிரிவுக்குள் உள்ளடங்காத காரணத்தினால் அப்பாடங்களில் சித்தியடைதலானது க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடமாகக் கருதப்பட மாட்டாது.

(இ) **தொழிற் தகைமைகள் :**

* பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தாதி பட்டத்தைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையின் பூரண பதிவைப் பெற்றிருத்தல், அல்லது

* சுகாதார அமைச்சுப் பயிற்சிக் கல்லூரியில் தாதிப் பயிற்சிப் பாடநெறியை 03 வருட காலமாகக் கற்று டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருத்தல் மற்றும் மருத்துவச் சபையில் பூரணப் பதிவைப் பெற்றிருத்தல்.

**குறிப்பு.-** க. பொ. த. (சா. தர) மற்றும் க. பொ. த. (உயர் தர) கல்வித் தகைமைகளினால் ஆட்சேர்ப்புச் செய்து தாதிப் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்பார்க்கும் வேட்பாளர்களுக்காக தொழிற் தகைமைகள் பொருந்தாது.

(ஈ) **அனுபவம் :**

* சுகாதார அமைச்சு அல்லது சுகாதார அமைச்சில் பதிவு செய்யப்பட்ட நிறுவனத்தினால் தொடர்புடைய துறையில் 06 மாதத்திற்கு குறையாத அனுபவமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

**குறிப்பு.-** க. பொ. த. (சா. தர) மற்றும் க. பொ. த. (உயர் தர) கல்வித் தகைமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்து தாதிப் பயிற்சிக்காகத் தெரிவு செய்வதற்கு எதிர்ப்பார்க்கும் விண்ணப்பதாரிகளுக்காக தொழில் அனுபவக் காலம் ஏற்புடையதன்று.

(உ) **உடற் தகைமைகள் :**

ஆண்

* உயரம் : 05 அடி 06 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.
* மார்பளவு : 32 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும். (மூச்சை உள்ளெடுக்காது)

பெண்

* உயரம் : 05 அடி 04 அங்குலத்திற்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.-** விசேட தகைமைகள் மற்றும் தேர்ச்சிகளுடனான விண்ணப்பதாரிகள் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் தற்றுணிபின் படி உயரம் மற்றும் மார்பளவு குறைக்கப்படலாம்.

(ஊ) **பார்வை பற்றிய தேவைப்பாடுகள்.**- ஒரு கண்ணின் பார்வை 6/12 இற்கு குறைவாக இருத்தல் ஆகாது. பார்வையானது ஒரு கண்ணில் 6/ 6 ஆகவும் மற்றைய கண்ணின் பார்வை 6/18 ஆகவும் இருப்பின் அதுவும் ஏற்றுக்கொள்ளப்படும். நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும்.

(எ) **வேறு தகைமைகள்.**-

(i) இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரிகள் இலங்கை பொலிஸ் துறை எதிர்பார்க்கின்ற சிறந்த நடத்தையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(iii) திருமணமாகாத ஆண்களாக/ பெண்களாக இருத்தல் வேண்டும். (விவாகரத்தானவர்கள் மற்றும் விதவைகள் இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்) பொலிஸ் சேவையில் அல்லது தாதி சேவையில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளவர்களுக்கு இது பொருந்தாது.

(iv) இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குக் கட்டுப்படல் வேண்டும்.

(v) செயற்கையான உடல் மாற்றங்கள் செய்யப்பட்டிருத்தலாகாது (உ-ம் - பச்சைக் குத்துதல்)

(vi) பதவியின் ஆட்சேர்ப்புக்குத் தேவையான 4 (அ) முதல் 4 (ஊ) வரை தகைமைகள் விண்ணப்பப்படிவங்களைக் கோறும் அறிவித்தலில் வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்ட திகதியன்று எல்லாவகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஏ) **உடற் தகுதி.**- அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் சேவை செய்வதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் மற்றும் உளத் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

05. **ஆட்சேர்ப்பு முறை.**-

5.1 முதற்கட்டத் தேர்வு
விண்ணப்பப் படிவங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகளுள் அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் மாத்திரமே முதற்கட்டத் தேர்விற்கு அழைக்கப்படுவர். அத்தேர்வின் போது மேற்குறித்த 4(அ) முதல் 4 (உ) வரையிலான தகைமைகள் பரிசீலிக்கப்படும்.

5.2 உடல் உறுதித் தேர்வு : பொலிஸ் மா அதிபரால் நியமிக்கப்படும் ஒரு குழுமத்தின் மூலம் விண்ணப்பதாரிகள் உடல் உறுதித் தேர்விற்கு உட்படுத்தப்படுவர்.

5.3 இப்பரீட்சையில் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவர்.

5.4 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை (தொழிற் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரிகள்/ பொலிஸ் சேமப்படையின் ஆட்சேர்ப்பிற்கு)

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும்போது தகைமைகளும் பரிசிலிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | தேர்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. தொழிற் தகைமைகள் :<br>இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் தாதிப் பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட தாதியர் கல்லூரியில் தாதியர் டிப்ளோமாவைப் பெற்று இலங்கை மருத்துவச் சபையில் பூரணப்பதிவைப் பெற்றிருத்தல் | 40 | ஏற்புடையதன்று |
| 02. சேவை அனுபவம் :<br>சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சுகாதார நிறுவனத்தில் சேவை அனுபவம் (ஒரு வருடத்திற்கு 04 புள்ளிகள் வீதம் அதிகபட்சம் 20 புள்ளிகள்) | 20 | |

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | தேர்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 03. மொழி அறிவு/கணினி ஆற்றல் வேறு | 10 | |
| 04. விளையாட்டு திறன் | 10 | |
| 05. தலைமைத்துவம்/சமூகச் சேவைகள் | 10 | |
| 06. நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

5.5 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை (தொழிற் தகைமைகளைப் பெறாத விண்ணப்பதாரிகளின் ஆட்சேர்ப்புக்காக)

கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடைபெறும் போது தகைமைகளும் பரிசிலிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புகள் | அதிகபட்சப் புள்ளிகள் | தேர்வு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்தபட்ச புள்ளிகள் |
|---|---|---|
| 01. மொழி அறிவு/கணினித் திறன்/வேறு | 30 | ஏற்புடையதன்று |
| 02. விளையாட்டு திறன் | 30 | |
| 03. தலைமைத்துவம்/சமூகச் சேவைகள் | 30 | |
| 04. நேர்முகப் பரீட்சைக் குழுமத்தின் மதிப்பீடு | 10 | |
| மொத்தம் | 100 | 40% |

5.6 கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சைக் குழுமத்தை நியமிக்கும் அதிகாரி - நியமன அதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர்.

5.7 ஆரம்ப பரீட்சையில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்படுவதோடு அதில் 40% அல்லது அதற்கு மேற்பட்ட மதிப்பெண்களைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரிகள் மாத்திரம் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

5.8 எழுத்துப் பரீட்சை (பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கு பொருந்தாது.)

| பாடங்கள் | அதிகபட்ச மதிப்பெண்கள் | சித்தியடையத் தேவையான மதிப்பெண்கள் |
|---|---|---|
| 01. கிரகித்தல் மற்றும் மொழித்திறன் | 100 | 40% |
| 02. பொது உளச்சார்பு பரீட்சை | 100 | 40% |
| 03. சுகாதார துறைக்குரிய பொது அறிவு | 100 | 40% |

5.9 பரீட்சையை நடாத்தும் அதிகாரி
நியமன அதிகாரி அல்லது அவரால் அதிகாரமளிக்கப்படும் உத்தியோகத்தர்.

5.10 கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக்கொள்ளும் மதிப்பெண்களை எழுத்துப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மதிப்பெண்களோடு சேர்த்து விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொள்ளும் மொத்த மதிப்பெண்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

5.11 விண்ணப்பப்படிவங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு பெற்றுக்கொண்ட மொத்த மதிப்பெண்களின் எண்ணிக்கையின் ஒழுங்கு முறைப்படி ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

06. **பின்னணிப் பரீட்சை**.-

6.1 மேற்குறித்த 5.11 ஆம் பந்திக்கமைவாக ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையுடைய விண்ணப்பதாரிகளின் நன்னடத்தை உறுதிப்படுத்துவதற்காக பின்னணிப் பரீட்சை நடாத்தப்படும்.

**குறிப்பு**:- நெருங்கிய உறவினர்கள் தொடர்பில் எவ்வித குற்ற அறிக்கைகளும் இருத்தலாகாது. நெருங்கிய உறவினர்கள் எனும் போது விண்ணப்பதாரியின் தாய், தந்தை, பாதுகாவலர், சகோதர, சகோதரிகள் மற்றும் சகோதர, சகோதரிகள் விவாகமானவர்கள் எனில் வாழ்க்கைத் துணை ஆகியோர் நெருங்கிய உறவினர்களாகக் கருதப்படுவர்.

6.2 விண்ணப்பதாரியின் நன்னடத்தையை உறுதிப்படுத்துவதற்காக அவர் மற்றும் அவரின் நெருங்கிய உறவினர்களினதும் அவர் நெருங்கிப் பழகுவோர்களினதும் நன்னடத்தைத் தொடர்பாக விசாரணைகள் நடாத்தப்படுவதோடு மோசமான பின்னணி அறிக்கையுடனான விண்ணப்பதாரிகள் ஆட்சேர்க்கப்படமாட்டார்கள்.

6.3 ஆட்சேர்க்கப்படும் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குவதனால் அவர் ஆட்சேர்ப்பு செய்வதற்கு தகைமையற்றவராவர். பொய்யான தகவல்களை வழங்கியமை தொடர்பாக ஆட்சேர்ப்பின் பின்னர் தெரிய வந்தால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

6.4 திறன் மதிப்பெண்களின் பட்டியல் படி ஆட்சேர்ப்புச் செய்வதற்காக எதிர்பார்க்கப்படும் விண்ணப்பதாரிகளின் பின்னணி அறிக்கைகள் கிடைக்கும் வரை அவர் மருத்துவப் பரீட்சைக்காக அழைக்கப்படமாட்டார்.

07. **மருத்துவப் பரிசோதனை**.- மருத்துவப் பரிசோதனைக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்திய சாலையின் பிரதான மருத்துவ உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்படும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைதல் வேண்டும். மேலும் இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் வைத்தியசாலையின் கடமைகளுக்குத் தகைமையுடையவர்கள் என உடல் மற்றும் உளத் தகைமைப் பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவார்கள். பிரதான மருத்துவ உத்தியோகத்தர் மருத்துவப் பரிசோதனையின் அறிக்கைகளை 169 சுகாதார படிவத்தின் கீழ் சமர்ப்பித்தல் வேண்டும். மருத்துவப் பரிசோதனைக்காக ஒரு முறை மாத்திரமே உட்படுத்தப்படமுடியும்.

08. **பயிற்சி**.-

8.1 நேரடி ஆட்சேர்ப்பு
பின்னணிப் பரீட்சையில் மற்றும் மருத்துவப் பரிசோதனையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மாத்திரம் பொலிஸ் மா அதிபரால் நிர்ணயிக்கப்படும் ஒரு தினத்தில் 12 வார அடிப்படைப் பொலிஸ் பயிற்சிக்காக அழைக்கப்படுவார்கள்.

8.2 தொழிற் தகைமைகளைப் பெறாத விண்ணப்பதாரிகள் அடிப்படைப் பயிற்சியின் பின்னர் இத்தொழிலுக்காக சுகாதார அமைச்சில் நடாத்தப்படும் 03 வருட தொழிற் பயிற்சிப் பாடநெறிக்காக ஈடுபடுத்தப்படுவார்கள்.

8.3 சுகாதார அமைச்சில் 03 வருட முழுநேர தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யாத உத்தியோகத்தர்களின் நியமனத்தை உறுதிப்படுத்தலானது தொழிற் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வரை இடைநிறுத்தப்படும். அதேபோன்று பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யாத அல்லது இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு வழங்குகின்ற 03 தடவைகளிலும் சித்தியடையாத உத்தியோகத்தர்களின் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

09. **சேவை நிபந்தனைகள்**.-

(1) சான்றிதழ்களைப் பெற்ற அல்லது பெறாத கட்டாயமாக ஆட்சேர்க்கப்படும் பயிலுநர் உத்தியோகத்தர்களை 03 வருட தகுதிகூர்/பயிலுநர் காலத்திற்கும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் தொழிற் பாடநெறியின் பின்னர் ஒரு வருட பதிற்கடமை காலத்திற்கும் உட்படுவர். (பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதன்று) பயிலுநர் காலப்பகுதியில் திருமணம் செய்வதாயின் பொலிஸ் மா அதிபரின் விசேட அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(2) க. பொ. த. (உயர் தர) பெறுபேறுகளின்படி கட்டாய ஆட்சேர்ப்பு செய்யும் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொழிற்பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் வரை குறித்த பதவியில் நிரந்தரமாக்குதல் இடைநிறுத்தப்படும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்கள் தொழிற்பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்திச் செய்வதற்கு முடியாமல் போனால் காலத்திற்கேற்றவாறு முன்பு இருந்த பதவியில் ஈடுபடுத்தப்படுவார்கள் (பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தாது)

(3) தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரச கரும மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்காக ஏற்கனவே விதிக்கப்பட்டுள்ள மற்றும் இதனகத்துப் பின்னர் அது தொடர்பாக விதிக்கப்படும் கட்டளைகள் இருப்பின் அவற்றிற்கும் ஏற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். (பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தாது)

(4) தாபன விதிக்கோவை ஏற்பாடு. நிதி ஒழுங்குவிதிகள் தேசிய பொலிஸ் ஆணைக்குழு சுற்றறிக்கைகள் மற்றும் ஏற்பாடுகள் அரசாங்க சேவை ஆணைக்குழு சுற்றறிக்கைகள், பொது நிர்வாகச் சுற்றறிக்கைகள், திறைசேரி சுற்றறிக்கைகள். கட்டளைகள், பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கைகள், கையேடுகள் மற்றும் அறிவுறுத்தற் கோவைகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்.

(5) க.பொ.த.(உயர் தர) தகைமைகளின்படி நேரடியாக ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் தாதிப் பயிற்சியை பூர்த்தி செய்ததன் பின்னர் தாதி சான்றிதழ் மற்றும் இலங்கை மருத்துவச் சபையில் பதிவைப் பெற்ற திகதி முதல் 15 வருட கட்டாயச் சேவைக் காலம் இலங்கை பொலிஸில் சேவையாற்ற வேண்டும். (பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு இது பொருந்தாது)

(6) கட்டாயச் சேவைக் காலம் பூர்த்தியாவதற்கு முன்னர் எவரேனுமொரு உத்தியோகத்தர் பதவியிலிருந்து விலக நினைத்தால் அவரின் பயிற்சி மற்றும் சீருடைகள் உட்பட ஏனைய செலவுகளுக்காகவும் நிர்ணயிக்கப்படும் தொகை இருப்பின் அவை அனைத்தையும் ராஜினாமா கடிதத்தை ஒப்படைக்கும் போது செலுத்துவதற்கு விருப்பம் தெரிவிக்கும் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும். பதவியிலிருந்து விலகுதல் தொடர்பின் தாபன விதிக்கோவை மற்றும் அரச சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும். (பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு இது பொருந்தாது)

(7) நேரடியாக ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்கள் நியமனத்தைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் அனைத்துக் கடன்கள் மற்றும் கடன் கடப்பாடுகளிலிருந்து விடுபட்டிருத்தல் வேண்டும். (பொலிஸ் சேமப்படைக்கு ஆட்சேர்க்கப்படும் உத்தியோகத்தர்களுக்கு இது பொருந்தாது)

(8) தகுதிகாண் பொலிஸ் சேமப்படைப் பரிசோதகர்கள் (துணைச் சேவை)/பெண் பொலிஸ் சேமப்படைப் பரிசோதகர்கள் (துணைச் சேவை) பயிற்சியை ஆரம்பித்தவுடனே இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கமைய பொலிஸ் மா அதிபரின் சுற்றறிக்கை இலக்கம் 1693/2003 மற்றும் 1804/2004 க்கு அமைய பொலிஸ் நெறிமுறைக் கோவைக்கமைய செயலாற்றுவீர்கள் என சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும்.

10. **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை**

| *எந்த வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை என்பது* | *வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டும் எத்தனை வருடங்கள் முன்?* | *வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சையின் தன்மை எழுத்துப் பரீட்சை/தொழிற் பரீட்சை/ சான்றிதழ் பாடநெறி/வேறு* |
|---|---|---|
| 01 ஆம் வினைத் திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்கல்) | பொலிஸ் சேமப்படைப் பரிசோதகர்கள் (துணைச் சேவை பதவிக்கு நியமனம் பெற்று 03 வருடங்கள் கழிவதற்கு முன்னர்) | பேச்சு, எழுத்து மற்றும் செயன்முறை |
| 02 ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சேமப்படைப் பரிசோதகர்கள் (துணைச் சேவை பதவிக்கு நியமனம் பெற்று 07 வருடங்கள் கழிவதற்கு முன்னர்) | பேச்சு, எழுத்து மற்றும் செயன்முறை |
| 03 ஆம் வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சேமப்படைப் பரிசோதகர்கள் (துணைச் சேவை பதவிக்கு நியமனம் பெற்று 07 வருடங்கள் கழிவதற்கு முன்னர்) | பேச்சு, எழுத்து மற்றும் செயன்முறை |

11. **மொழித்தேர்ச்சி**

| *மொழி* | *பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சி* |
|---|---|
| அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத மொழி மூலம் சேவைக்கு இணைந்த உத்தியோகத்தர்கள் உரிய அரச கரும மொழித்தேர்ச்சிச் சுற்றறிக்கை 01/2014 மற்றும் அதற்கு அமைவான சுற்றறிக்கைக்கு அமைய பெற்றுக்கொள்ள வேண்டும். |
| மற்றைய அரசகரும மொழி | பொது நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 அதற்கு இடைநேர் விளைவான சுற்றறிக்கைக்கு அமைய குறித்த மட்டத்தின் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். |
| இணைப்புமொழி | ஏற்றுபுடையதன்று |

12. விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை தனது விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்து அனுப்ப வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) நன்னடத்தைப் பற்றி அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு சான்றிதழ்கள். (உறவினர் அல்லாத) ;
(iii) விசேட சாதனைகளுடனான விளையாட்டு குறித்த சான்றிதழ்கள் அல்லது வெளிவாரிச் செயற்பாடுகள் தொடர்பாக பெற்றுக்கொண்ட சான்றிதழ்கள் ;
(iv) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ்கள் (இருப்பின் மாத்திரம்) ;
(v) தேசிய ஆள் அடையாள அட்டையின் ஒரு பிரதி ;

13.(13.1) ஏற்கனவே அரச சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பப்படிவத்தை குறித்த திணைக்களத் தலைவர்கள் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் என்பதைக் குறிப்பிடும் ஒரு சான்றிதழை இணைத்து அனுப்பவேண்டும்.

(13.2) விண்ணப்பதாரி விண்ணப்பப்படிவத்தை 11'' x 8'' அங்குலமுடைய தாளில் தனது கையெழுத்திலேயே பூர்த்தி செய்து குறித்த சான்றிதழ் பிரதிகளோடு மேற்குறித்த இரண்டாம் பந்தியில் குறிப்பிட்டுள்ள முகவரிக்குக் கிடைக்கும்படி அனுப்ப வேண்டியதோடு எந்தவொரு காரணத்திற்காகவும் அதை எந்தவொரு உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட முறையில் ஒப்படைக்கலாகாது.

14. இவ் அறிவித்தலின் குறிப்பிட்டுள்ள தேவைப்பாடுகளை அனைத்து முறைகளிலும் உறுதிப்படுத்தாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- பரீட்சை அல்லது நேர்முகப் பரீட்சைகளுக்கு அழைக்கப்படுகின்ற விண்ணப்பதாரிகளுக்குப் போக்குவரத்துச் செலவுகள் அல்லது ஏனைய செலவுகள் எதுவும் செலுத்தப்படமாட்டாது.

சீ. டீ. விக்ரமரத்ன,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் தலைமையகம்,
கொழும்பு - 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக உபயோகத்துக்கு |
|---|

1 1/2 அங்குலம்

**இலங்கைப் பொலிஸ்**

பொலிஸ் உதவிச் சேவை சேமப்படை உப பொலிஸ் பரிசோதகர் (தாதி உத்தியோகத்தர்) மற்றும் சேமப்படை பெண் உப பொலிஸ் பரிசோதகர் (தாதி உத்தியோகத்தர்)

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ள படியே இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இல. :-----.
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் : -----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.

(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(ஊ) கடிதம் அனுப்பும் முகவரி :-----.

(எ) தொலைபேசி இல. வதிவிடம் :-----. கையடக்க தொலைபேசி இல. :------.

6. (அ) இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால், பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தைவழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தைவழி முப்பாட்டன் : -----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-

வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/திருமணம் ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.
(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ)-----.
(ஆ)-----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? :-----.
பதவி மற்றும் வழங்கப்பட்ட இலக்கம் :-----.
ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கின்றீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணபத்தை அனுப்ப வேண்டும் :-----.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும் :-----.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீர்களா? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா ? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவையென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யானவையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் இலங்கைப் பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ...................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் தெரிவிக்கின்றேன்.

.................,
(திணைக்களத் தலைவரின் கையொப்பம்)
பதவி முத்திரை இடப்படவேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

06-565

---

## இலங்கை நிரந்தர/தொண்டர் கடற்படை (ஆண்/பெண்) உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள்

01. இலங்கை நிரந்தர/ தொண்டர் கடற்படை (ஆண்/ பெண்) உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

02. பின்வரும் துறைகளுக்கு தகைமையுடைய ஆண்/ பெண் விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(அ) நிறைவேற்றுனர் பிரிவு (நிரந்தரக் கடற்படை)

*பதவி.-* துணை லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் விஞ்ஞானத் துறையில் சாதாரணப் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

*வயது.-* 30 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) கடல்சார் பொறியியல் பிரிவு (நிரந்தரக் கடற்படை)

*பதவி.-* லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் கடல்சார்/இயந்திரப் பொறியியல் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

*வயது.-* 32 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(இ) மோட்டார் வண்டி பொறியியல் பிரிவு (நிரந்தரக் கடற்படை)

*பதவி.-* லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் இயந்திர/ மோட்டார் வண்டிப் பொறியியல் பட்டமொன்றை பெற்றிருத்தல்.

*வயது.-* 32 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) மருத்துவ/ பல் மருத்துவப் பிரிவு (நிரந்தரக் கடற்படை)

1. பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

   *கல்வித் தகைமைகள்.-* MBBS மூன்றாம் பரீட்சையில் பகுதி I மற்றும் II ஐப் பூர்த்தி செய்திருத்தல் (இறுதி ஆண்டில் கல்வி கற்றல்), பல் மருத்துவ பட்டப் படிப்பில் BDS இறுதி ஆண்டில் பகுதி I ஐப் பூர்த்தி செய்திருத்தல்

   *வயது.-* 18 வயதிற்கும் 26 வயதிற்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

2. துணை லெப்டினன்ட் (ஆண்/பெண்)

   *கல்வித் தகைமைகள்.-* MBBS இறுதி ஆண்டைப் பூர்த்தி செய்திருத்தல்/ BDS இறுதி ஆண்டில் பகுதி II ஐப் பூர்த்தி செய்திருத்தல்

   வயது.- 30 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

3. லெப்டினன்ட் (ஆண்/பெண்)

   *கல்வித் தகைமைகள்.-* மருத்துவ/பல் மருத்துவப் பட்டத்தைப் (MBBS/BDS) பெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான தகைமையுடைய மற்றும் இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருத்தல் (SLMC).

   *வயது.-* 35 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(உ) வழங்கும் பிரிவு (நிரந்தரக் கடற்படை)

*பதவி.-* துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் வர்த்தக முகாமைத்துவம், நிதி முகாமைத்துவம், வணிகம் மற்றும் கணக்கியல், பொருளியல், அரசாங்க நிர்வாகம், மதிப்பாய்வு ஆகிய பாடங்களுக்காக பட்டமொன்றை பெற்றிருத்தல்.

*வயது.-* 30 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஊ) கப்பல் கட்டும் பொறியியல் பிரிவு (நிரந்தரக் கடற்படை)

*பதவி.-* லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கையில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு அல்லது வெளிநாட்டு பல்கலைக்கழகமொன்றில் (இயந்திர/ உற்பத்தி/ பொருள் விஞ்ஞானம்) பொறியியல் அல்லது கப்பல் நிர்மாணம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல்.

*வயது.-* 32 வயதுக்குக் குறைந்தவராக இருத்தல் வேண்டும்.

(ஏ) *சிவில் பொறியியலாளர் (வேலைத்தளம்) பிரிவு (நிரந்தர/ தொண்டர் கடற்படை)*

*பதவி.-* லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கைப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சிவில் பொறியியல் விஞ்ஞான பட்டமொன்றை பெற்றிருத்தல். (BSc. in Civil Engineering) அல்லது இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தினால் (IESL) நடாத்தப்படும் சிவில் பொறியியல் விஞ்ஞானம் தொடர்பான I மற்றும் II ஆம் பகுதியில் (பழைய பாடத்திட்டம்) பரீட்சை அல்லது I, II மற்றும் III ஆம் பகுதியில் புதிய பாடத்திட்டம்) பரீட்சை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கைப் பொறியியலாளர் நிறுவனத்தினால் (IESL) ஏற்றுக்கொள்ளப்படும் ஏனைய தகைமைகள்.

*வயது.-* வயது 32 வயதுக்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்.

(ஏ) *கட்டிடக் கலைப் பிரிவு (வேலைத்தளம்) பிரிவு (நிரந்தர/ தொண்டர் கடற்படை)*

*பதவி.-* லெப்டினன்ட் (ஆண்)

*கல்வித் தகைமைகள்.-* மொறட்டுவை பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் கட்டிடக் கலை தொடர்பான பட்டம் (B. Arch) பெற்றிருத்தல் அல்லது இலங்கை கட்டிடக்கலை நிறுவனத்தினால் (SLIA) நடாத்தப்படும் முதலாம் மற்றும் இரண்டாம் நிலை தொழில்சார் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் அல்லது இலங்கைக் கட்டிடக்கலை நிறுவனத்தினால் (SLIA) அங்கீகரிக்கப்பட்ட வேறு சமமான தகைமைகள்.

*வயது.-* வயது 32 வயதுக்கு குறைவானவராக இருத்தல் வேண்டும்.

(ஐ) *நிறைவேற்றுனர் பிரிவு (தொண்டர் கடற்படை)*

*பதவி.-* பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட் (ஆண்/ பெண்)

*கல்வித் தகைமைகள்.-* இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் பொதுப் பட்டமொன்றை பெற்றிருத்தல் அல்லது தேசிய தொழில்நுட்ப டிப்ளோமாவை (NDT) பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அரச அல்லது தனியார் துறையில் நிர்வாக/ நிறைவேற்று தரத்தில் ஒரு வருடகால அனுபவம் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உயர்தர டிப்ளோமா (SLQL 4) தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் மற்றும் அரச அல்லது தனியார் துறையில் நிர்வாக/ நிறைவேற்று தரத்தில் 02 வருடகால அனுபவம்.

*வயது.-* 30 வயதுக்குக் குறைவானவராக இருத்தல் வேண்டும்.

3. **ஏனைய தகைமைகள்.-** விண்ணப்பதாரர்கள் இலங்கை நிரந்தர/தொண்டர் கடற்படையில் இணைந்து கொள்வதற்கு பின்வரும் பொது நிபந்தனைகளைக் கட்டாயமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(அ) *குடியுரிமை.-* இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ஆ) *வயது.- 2019, யூலை மாதம் 01 ஆந் திகதியன்று* வயது அந்தந்த துறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இருத்தல் வேண்டும்.

(இ) *உயரம்* (நிரந்தர).- ஆண் - 165 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

பெண் - 160 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

*உயரம்* (தொண்டர்).- ஆண் - 160 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

பெண் - 157 சென்றி மீற்றருக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்

(ஈ) *எடை* (நிரந்தர/ தொண்டர்) .- ஆண் - 52 கிலோ கிராமிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

பெண் - 41 கிலோ கிராமிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

(உ) *மார்பு* (நிரந்தர/ தொண்டர்).- ஆண் - 81 சென்றி மீற்றருக்கு குறையாமல் இருத்தல் வேண்டும்

(ஊ) *பார்வை வர்ணப்பதிவு மட்டம்* (நிரந்தர/ தொண்டர்).- எஸ்ரீஏ II (தெளிவான பார்வை)

(எ) *தூர பார்வை* (நிரந்தர/ தொண்டர்).- இரண்டு கண்களிலும் 6/ 6

* *மருத்துவ/பல் மருத்துவ உத்தியோகத்தர்கள் மற்றும் மாணவர்களுக்கு தூர பார்வை மூக்குக் கண்ணாடி இல்லாமல் 6/6 முதல் 6/12 வரை (மூக்குக் கண்ணாடி மூலம் சரியாக 6/6 ஆக இருத்தல்)*

(ஏ) *குடியியல் நிலை.-* திருமணமானவர்/ திருமணமாகாதவர்

4. விளையாட்டுத் துறையில் ஈட்டியுள்ள சாதனைகள் முறையாக கவனத்தில் கொள்ளப்படும்.

5. மேற்குறித்த இரண்டாம் மூன்றாம் பந்திகளிலுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதலாவது நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்கையில் உயரம், எடை, பார்வை மட்டம் என்பன பரிசீலிக்கப்படும். வர்த்தமானியில் குறித்துரைக்கப்பட்ட அளவுகளுக்கு அமைய உயரம், எடை, பார்வை மட்டம் ஆகியவற்றைக் கொண்டிராதவர்கள் நேர்முகப்பரீட்சைக்கு உட்படுத்தப்பட மாட்டார்கள். எவரேனுமொரு விண்ணப்பதாரரின் உயரம் மற்றும் வயது உரியவாறு இல்லாதிருப்பினும் கடற்படைக்கு நன்மை பயக்கும் விசேட திறனை அவர் பெற்றிருப்பின் சேவை தேவைப்பாட்டிற்கமைய கடற்படைத் தளபதியின் அனுமதியுடன் அவர் குறித்து கவனம் செலுத்தப்படும்.

6. **சேவை நிபந்தனைகள் :**

(அ) விண்ணப்பதாரர்கள் நிரந்தர/ தொண்டர்க் கடற்படையின் உத்தியோகத்தர் பதவிகளுக்காக ஆட்சேர்க்கப்படுவதோடு அவர்கள் அடிப்படைப் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தல் வேண்டும். பாடநெறியின் கால எல்லை ஆட்சேர்க்கப்படும் அந்தந்த துறைக்கமைய மாறுபடும்.

(ஆ) பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனையின் படி கடற்படைத் தளபதியினால் தீர்மானிக்கப்படுவதற்கமைய இலங்கையில் எந்தவொரு பிரதேசத்திலும் அல்லது வெளிநாட்டில் பயிற்சிபெறுவதற்கு ஆட்சேர்க்கப்படும் நிரந்தர/ தொண்டர்க் கடற்படையின் உத்தியோகத்தர் ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(இ) அனைத்து உத்தியோகத்தர்களும் கடமையாற்றுவதற்கு அல்லது பயிற்சி பெறுவதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உலகில் எந்தவொரு நாட்டிற்கும் இணைப்புச் செய்வதற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(ஈ) பயிற்சி பெறும் காலப்பகுதியில் மற்றும் அதன் பின்னர் நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தர் கடற்படைச் சட்டத்திற்கு கட்டுப்படுதல் வேண்டும்.

(உ) அதிகாரத்தைப் பெறுவதற்கான பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் காலப்பகுதியில் ஏதேனுமொரு நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தர் தமது சுய விருப்பத்திற்கமைய பயிற்சியிலிருந்து இடை விலக வேண்டி ஏற்படின் குறித்த நிரந்தர/தொண்டர் உத்தியோகத்தருக்காக அது வரையிலும் இலங்கைக் குடியரசினால் மேற்கொள்ளப்பட்ட செலவுகள் அனைத்தையும் குறித்த நிரந்தர /தொண்டர் உத்தியோகத்தர் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிற்கு மீளச்செலுத்துதல் வேண்டும்.

(ஊ) பயிற்சிக் காலத்தின் போது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஏதேனுமொரு நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தரின் துர்நடத்தை காரணமாக அல்லது அவர் பொறுப்புக் கூற வேண்டிய ஏதேனுமொரு காரணத்திற்காக அதிகாரத்தை வழங்குவதற்கு அவர் பொருத்தமற்றவரென பொறுப்பிலுள்ளவர்களினால் தீர்மானிக்கப்பட்டால் அச் சந்தர்ப்பத்திலேயே குறித்த நிரந்தர/தொண்டர் உத்தியோகத்தர் அதுவரையிலும் அவருக்காக செய்த செலவுகள் அனைத்தையும் இலங்கைக் கடற்படைக்கு மீளச் செலுத்துவதற்கு ஒப்புக்கொள்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவராக கடற்படைத் தளபதியுடன் உடன்படிக்கை அல்லது ஒப்பந்தத்திற்கு உட்படுதல் வேண்டும்.

(எ) பயிற்சிக் காலத்தின் போது நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகத்தர் இல்லங்களில் தங்குமிட வசதிகளும் உணவுகளும் வழங்கப்படும்.

(ஏ) திருமணமாகிய உத்தியோகத்தர்களுக்கு குடிமனைகள் (தேவை இருப்பின்) வழங்கப்படும். இதன் பொருட்டு அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையவாறு வாடகை அறவிடப்படும்.

7. **அரசகரும மொழித் தேவைப்பாடுகள்.**- தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் மொழிக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதன் பொருட்டு தற்போது விதிக்கப்பட்டுள்ள மற்றும் எதிர்காலத்தில் விதிக்கப்படும் கட்டளைகளையும் நியதிகளையும் பின்பற்றல் வேண்டும்.

*8.* **சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**.- *2019.01.01* ஆந் திகதி முதல் இல. *03/ 2016* முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் சம்பளம் செலுத்தப்படும்.

| *விபரம்* | *பதில் கடமையாற்றும் துணை லெப்டினன்ட்* | *துணை லெப்டினன்ட்* | *லெப்டினன்ட்* | *துணை லெப்டினன்ட்* | *லெப்டினன்ட்* |
|---|---|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | *29,031.00* | *29,361.00* | *37,569.00* | *42,679.00* | *49,861.00* |
| வாழ்க்கைச்செலவுக் கொடுப்பனவு | *7,800.00* | *7,800.00* | *7,800.00* | *7,800.00* | *7,800.00* |
| சீருடை பேணுதல் கொடுப்பனவு | *255.00* | *255.00* | *255.00* | *255.00* | *255.00* |
| கடின தங்குமிட கொடுப்பனவு | - | - | *600.00* | *600.00* | *600.00* |
| கடினப்படி (யுத்தமற்ற பிரதேசங்களில்) | *1,000.00* | *1,000.00* | *1,000.00* | *1,000.00* | *1,000.00* |
| விசேட மேலதிக கொடுப்பனவு | *3,000.00* | *3,000.00* | *3,000.00* | *3,000.00* | *3,000.00* |
| உணவுக் கொடுப்பனவு | *41,086.00* | *41,416.00* | *50,224.00* | *55,334.00* | *62,516.00* |
| மொத்தம் | | | | *1,197.00* | *1,197.00* |

(அ) சரிசெய்தல் கொடுப்பனவு இல. 03/2016 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் பிரகாரம் 2020.01.01 ஆந் திகதிக்கு முழுமையாக அடிப்படைச் சம்பளத்திற்கு சேர்க்கப்படும்.

(ஆ) உணவு எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே உணவுக் கொடுப்பனவு கிடைக்கப்பெறும்.

(இ) உரியவாறு தகைமைப்படியானது மாதமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா 637.50 செலுத்தப்படும்.

(ஈ) இலவசமாக புகையிரதத்தில் பயணிக்கக்கூடிய மூன்று சோடி புகையிரத ஆணைச்சீட்டுக்கள் ஆண்டொன்றுக்கு உரித்தாகும். (ஏற்புடையவாறு உத்தியோகத்தருக்கு, வாழ்க்கைத் துணைக்கு, பிள்ளைகளுக்கு மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு).

(உ) முகாமில் வசிக்கும் உத்தியோகத்தர்களுக்கு மாதமொரு தடவை உத்தியோகத்தர் இல்லத்திலிருந்து சொந்த இருப்பிடம் போய்வருவதற்கு ஒரு சோடி புகையிரத ஆணைச்சீட்டு அல்லது பஸ் வண்டிக் கட்டணம் செலுத்தப்படும்.

(ஊ) சீருடையும் அதற்கான ஏனைய பொருட்களும் இலவசமாக வழங்கப்படும்.

(எ) இலவச மருத்துவ வசதிகள் வழங்கப்படும். (ஏற்புடையவாறு உத்தியோகத்தருக்கு, வாழ்க்கைத் துணைக்கு, பிள்ளைகளுக்கு மற்றும் தங்கி வாழ்பவர்களுக்கு)

(ஏ) அரசாங்க குடிமனைகளில் வசிக்காத திருமணமான உத்தியோகத்தர்களுக்கு ரூபா 1,600.00 முதல் ரூபா 4,250.00 வரை வாடகைக் கொடுப்பனவு உரித்தாகும்.

(ஐ) மருத்துவ/பல் மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு சுகாதார அமைச்சின் அங்கீகாரத்தின் படி உள்ளகப் பயிற்சி காலப்பகுதியின்பின்னர் மேலதிகக் கடமைக் கொடுப்பனவு மற்றும் 1/120 கொடுப்பனவு உரித்தாகும்.

(ஒ) பொறியியலாளர்களுக்கு அரசாங்க அங்கீகாரம் பெற்ற விசேட கொடுப்பனவுகள் உரித்தாகும்.

9. **விண்ணப்பதாரர்களுக்கான அறிவுறுத்தல்கள்** :

(அ) கீழே கொடுக்கப்பட்டுள்ள படிவத்திற்கமைய விண்ணப்பப்படிவத்தில் அனைத்து பந்திகளும் கூடியவரை விரிவாக விவரங்களுடன் தெளிவான கையெழுத்தில் நிரப்பப்படவேண்டும். விண்ணப்பங்கள் 2019, யூலை மாதம் 01 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக "சிரேஷ்ட பதவிநிலை அதிகாரி (ஆட்சேர்ப்பு), கடற்படைத் தலைமையகம், த. பெ. இல. 593, கொழும்பு 01" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும். பதிவுத் தபாலில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "கட்டாய ஆட்சேர்ப்பு செய்தல் - நிரந்தர/ தொண்டர் உத்தியோகத்தர்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இறுதித் திகதி மற்றும் நேரத்தின் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் மற்றும் இந்த அறிவித்தலின் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். இது தொடர்பான மேலதிக விபரங்களை www.navy.lk இணையத்தளத்தில் அல்லது தொலைபேசி இலக்கம் 011- 7195154/ 011-7195118 மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

(ஆ) அரசாங்க சேவையில்/ கூட்டுத்தாபனத்தில்/சபையில்/ சிவில் நிறுவனங்களில் சேவையிலுள்ள விண்ணப்பதாரர்களது விண்ணப்பங்கள் தத்தம் திணைக்களத்தின்/ கூட்டுத்தாபனத்தின்/ சபையின் / நிறுவனத் தலைவர் ஊடாக அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படின் விடுவிக்க முடியும் என்ற சான்றுரையையும் விண்ணப்பங்கள் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு அல்லது வேறொரு சந்தர்ப்பத்தில் அழைக்கப்படும் போது பின்வருவம் ஆவணங்களின் மூலப் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பத்தை அனுப்பிவைக்கும் போது இவ் ஆவணங்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளையும் அனுப்ப வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ் ;

(2) விண்ணப்பித்த பிரிவுகளுக்கான கல்வித் தகைமைகளை சான்றுப்படுத்தும் கல்வி/ உயர் கல்வி/ தொழில்சார் கல்வி/பட்டச் சான்றிதழ் ;

(3) பாடசாலை விலகல் சான்றிதழ்/நற்சான்றிதழ் ;

(4) 06 மாதத்திற்குள் பெறப்பட்ட கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(5) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட தொழில்சார்/ தொழில்நுட்பப்பயிற்சி, அனுபவம் இருப்பின் அதற்கான சான்றிதழ் ;

(6) சமீபத்தில் பெறப்பட்ட இரு நற்சான்றிதழ்கள் (இரண்டு வருடங்களுக்கு மேலாக விண்ணப்பதாரரை அறிந்துள்ளவரான பொறுப்பு வாய்ந்த ஒருவரிடமிருந்து அல்லது தற்போதைய தொழில்தருநரிடமிருந்து);

(7) விளையாட்டுத் துறைகள் மற்றும் பயிலிளவல் பயிற்சி முதலியவற்றை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள்.

(ஈ) வேண்டப்படும் சந்தர்ப்பங்களில் குறித்த ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறும் விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

(உ) வேறெந்த ஆவணங்களோ, ஆவணங்களின் மூலப் பிரதிகளோ விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப் படுதலாகாது.

(ஊ) விண்ணப்பப்படிவத்துடன் சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டு அவை காணாமற் போயின் அது குறித்து கடற்படை பொறுப்பேற்காது.

10. விண்ணப்பத்தில் போலியான தகவல்கள் வழங்கப்பட்டு, அது குறித்து அவ் விண்ணப்பதாரரை தெரிவு செய்வதற்கு முன்னர் வெளிப்பட்டால் அவரின் பரீட்சார்த்தி தன்மையை நீக்குவதற்கும், தெரிவு செய்ததன் பின்னர் வெளிப்பட்டால் அவரை பதவியிலிருந்து நீக்குவதற்கும் விண்ணப்பதாரர் கட்டுப்படுவார்.

11. **தேர்ந்தெடுத்தல், நேர்முகப்பரீட்சை** :

(அ) மேற்கூறப்பட்டுள்ள தேவைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்களுக்காக இலங்கை கடற்படையினால் நடாத்தப்படும் அடிப்படை மருத்துவ சோதனையில் தேர்ச்சியடைதல் வேண்டும். அச் சோதனையில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைதல் வேண்டும். உடல் உறுதித் தேர்வில் தேர்ச்சியடைந்த விண்ணப்பதாரர்கள் கடற்படை

தளபதியினால் விதித்துரைக்கப்பட்டதன் பிரகாரம் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தல் வேண்டும். இதன் பின்னர் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுச் சபையின் நேர்முகத் தேர்விற்கு உட்படுத்தப்படுவதன் மூலம் இறுதித் தேர்வு செய்யப்படும்.

(ஆ) உடல் உறுதித் தேர்வு தேர்ச்சியடைவதற்கான தேவைப்பாடுகள்

| வயது எல்லை | 800 மீற்றர் ஓட்டம் | CURL UP (2MN) | PUSH UP (2MN) |
|---|---|---|---|
| 18 -24 ஆண் | 3.30 – 5.30 நிமிடங்களுக் கிடையில் | 19 அல்லது அதை விட கூடுதலாக | 21 அல்லது அதை விட கூடுதலாக |
| 18 -24 பெண் | 4 – 6 நிமிடங்களுக்கிடையில் | 13 அல்லது அதை விட கூடுதலாக | 05 அல்லது அதைவிட கூடுதலாக |
| 25 - 29 ஆண் | 4– 5.30 நிமிடங்களுக்கிடையில் | 19 அல்லது அதை விட கூடுதலாக | 20 அல்லது அதை விட கூடுதலாக |
| 25 - 29 பெண் | 4.30 –6.30 நிமிடங்களுக் கிடையில் | 12 அல்லது அதை விட கூடுதலாக | 03 அல்லது அதை விட கூடுதலாக |
| 30 - 34 ஆண் | 4.30 – 6.30 நிமிடங்களுக் கிடையில் | 15 அல்லது அதை விட கூடுதலாக | 14 அல்லது அதை விட கூடுதலாக |
| 30 - 34 பெண் கிடையில் | 5.00 –7.00 நிமிடங்களுக் | 09 அல்லது அதை விட கூடுதலாக | 02 அல்லது அதை விட கூடுதலாக |
| 35 - 39 ஆண் கிடையில் | 5.00 – 7.00 நிமிடங்களுக் | 13 அல்லது அதை விட கூடுதலாக | 12 அல்லது அதை விட கூடுதலாக |
| 35 - 39 பெண் கிடையில் | 5.30 –7.30 நிமிடங்களுக் | 06 அல்லது அதை விட கூடுதலாக | 02 அல்லது அதை விட கூடுதலாக |

(இ) உடல் உறுதித் தேர்வில் சித்தியடையும் விண்ணப்பதாரர்களை மாத்திரமே அன்றைய தினமே அடிப்படை நேர்முகத் தேர்விற்கு உட்படுத்துவதோடு, அதில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இரண்டாம் நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவர். இரண்டாம் நேர்முகத் தேர்வில் சித்தியடையும் விண்ணப்பதாரர்கள் மாத்திரமே இறுதி நேர்முகத் தேர்விற்கு அழைக்கப்படுவதோடு அத் தேர்வில் பெற்றுக் கொள்ளும் புள்ளிகள் மற்றும் வெற்றிடங்களின் படி அந்தந்த பிரிவில் அதிக புள்ளிகள் பெற்ற விண்ணப்பதாரர்கள் மாத்திரமே அழைக்கப்படுவர்.

(ஈ) நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சைக்கான இடம், நேரம், திகதி என்பன விண்ணப்பதாரர்களால் வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்து மூலம் அறிவிக்கப்படும். இது சம்பந்தமாகப் பயண அல்லது பிற செலவுகள் ஏதும் வழங்கப்படமாட்டாது.

(உ) இப்பதவி தொடர்பாக விண்ணப்பதாரர் அழைக்கப்படும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள தேசிய ஆள் அடையாள அட்டையை சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஊ) இறுதி நேர்முகப் பரீட்சையின் பின்னர் தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் கடற்படை மருத்துவச்சபைக்கு சமுகமளித்தல் வேண்டும்.

(எ) விண்ணப்பதாரர் ஒருவரை சிபாரிசு செய்ய விரும்புவதாயின் அவருக்கு ஒரு நற்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரர் ஒருவரின் தெரிவில் எந்தவிதமான ஆதரவையும் தேடுதல் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க முயற்சித்தல் அத்தகைய விண்ணப்பதாரரை தகைமையற்றவராக்கும்.

(ஏ) ஆட்சேர்ப்பிற்குப் பொருத்தமற்றவராகக் காணப்படும் விண்ணப்பதாரர்களுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படமாட்டாது.

(ஐ) மருத்துவ/ பல் மருத்துவப் பிரிவுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரர்கள் தற்போது பல்கலைக்கழகத்தில் கல்வி கற்றுக் கொண்டிருப்பின் அவரைத் தெரிவு செய்த பின்னர் மீண்டும் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பதற்காக முழுச் சம்பளத்துடன் விடுவிக்கப்படுவதோடு அதற்காக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் முகவரான கடற்படைத் தளபதியுடன் ஒரு உடன்படிக்கைக்கு வருதல் வேண்டும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுவதோடு சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிப் பிரயோகங்கள் தொடர்பாக சிக்கல் ஏற்பட்டால், அப்போது சிங்கள மொழிப் பிரயோகமே வலிதானதாகும்.

கே. கே. வீ. பீ. எச். த சில்வா டபிள்யூ.டபிள்யூ.வீ*,
ஆர்டபிள்யூபீ, ஆர்எஸ்பீ, வீஎஸ்வீ, யூஎஸ்பீ, என்டியூ,
வயிஸ் அத்மிரால்,
கடற்படைத் தளபதி.

கடற்படைத் தலைமையகம்,
த. பெ. இல. 593,
கொழும்பு 01.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை நிரந்தர/தொண்டர் கடற்படை அலுவலர்களுக்கான விண்ணப்பம்**

1. தேசிய இனம் :----.

(இலங்கைப் பிரசையாயின் வம்சாவழியிலா அல்லது பதிவு முறையிலா, பதிவுமுறையாயின் சான்றிதழின் இலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக)

2. விண்ணப்பிக்கும் துறை மற்றும் பதவி :----.
3. முழுப்பெயர் (தேசிய ஆளடையாள அட்டையிலுள்ளபடி) :----.
4. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :----.
5. நிரந்தர முகவரி :----.
6. அஞ்சல் முகவரி :----.
7. மின்னஞ்சல் முகவரி :----.
8. பிறந்த திகதி :----.
9. வயது (2019, யூலை மாதம் 01 ஆந் திகதியன்று) வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.
10. உயரம் :----. (செ.மீ.) மார்பு :----. (செ.மீ.) எடை :----. (கி.கி.)
11. நிரந்தர முகவரிக்கு அண்மையிலுள்ள பொலிசு நிலையம் :----.
12. மாவட்டம் :----.
13. தேர்தல் தொகுதி :----.
14. கிராம அலுவலர் பிரிவு :----.
15. தொலைபேசி இலக்கம் :----.
16. திருமணமானவரா அல்லது திருமணமாகாதவரா ? :----.
17. பால் :----.
18. கல்வி கற்ற பாடசாலை :----.

19. பாடசாலை மற்றும் பல்கலைக்கழகம் பற்றிய விபரங்கள் :

| பாடசாலை/ பல்கலைக் கழகத்தின் பெயர் | பரீட்சையின் தன்மை | பரீட்சையின் ஆண்டு | சித்தியடைந்த பாடங்கள் (தரம் உட்பட) |
|---|---|---|---|
| | க.பொ.த. (சா.த.)<br>க.பொ.த. (உ.த.)<br>வேறு | | |

20. பாடசாலை/ பல்கலைக்கழகத்தில் இருந்து விலகியதிலிருந்து புரிந்த தொழில் பற்றிய விபரங்கள் :-

| தொழில் தருநரின் பெயரும் முகவரியும் | தொழிலின் தன்மை | சேவைக்காலப் பகுதி | |
|---|---|---|---|
| | | இருந்து | வரை |
| | | | |

21. பெற்றோர் பற்றிய விபரங்கள் :-

| முழுப்பெயர் | பிறந்த இடம் | தொழில் | தற்போதைய முகவரி |
|---|---|---|---|
| தந்தை | | | |
| தாய் | | | |

22. பதவிக்கான எவையேனும் சிறப்பான தகைமைகள் :----.

23. விளையாட்டில் தற்போதைய சாதனைகளின் விபரம் :----. (பங்கு பற்றிய போட்டிகளையும் குழுக்கள் பற்றிய விபரங்களையும் திகதியுடனும் பெற்ற சாதனைகளுடனும் தருக).

24. பாடசாலை, பல்கலைக்கழகம் அல்லது வெளி அமைப்புகளில் இருக்கும் பொழுது பெற்ற சாதனைகள் (திகதிகளுடன் விபரத்தையும் தருக.) :----.

25. ஆயுதப் படையில், தொண்டர் படையில், பயிலிளவல் படையணியில் அல்லது சாரணர் இயக்கத்தில் ஆற்றிய சேவை :----.

26. இலங்கை கடற்படையில் அல்லது ஆயுதப் படையில் ஏதேனும் சேவையில் அல்லது பொலிஸ் சேவையில் சேர்வதற்காக இதற்கு முன்பு விண்ணப்பித்துள்ளீரா ? அவ்வாறாயின், விபரங்களையும் அத்தகைய விண்ணப்பத்தின் பேற்றினையும் தருக :----.

27. சிவில் அல்லது இராணுவ நீதிமன்றத்தினால் தண்டிக்கப்பட்டீரா? அல்லது இடைநிறுத்தப்பட்ட சிறைத் தண்டனை பெற்றுள்ளீரா? அப்படியாயின் விபரங்கள் தருக :----.

28. இதற்கு முன்னர் அரசாங்கத் திணைக்களத்திலோ அல்லது பகிரங்கத் துறையில்/ சபையில்/ கூட்டுத்தாபனத்தில் (மத்தியவங்கி/தேசிய வங்கி/பல்கலைக்கழகங்கள்/அரசாங்கத்தின் கட்டுப்பாட்டிலுள்ள கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பனிகள் உட்பட) வேலை செய்திருப்பின் வேலையில் இருந்து விலகியதன் காரணம் :----.

29. நற்சான்றிதழ்கள் வழங்கியோர் பற்றிய விபரங்கள் :-

| பெயர் | பதவிப் பெயர் | அஞ்சல் முகவரி |
|---|---|---|
| | | |

30. **விண்ணப்பதாரர் கைச்சாத்திடவேண்டிய வெளிப்படுத்துகை :**
மேலே என்னால் கொடுக்கப்பட்டுள்ள தரவுகள் யாவும் என் அறிவுக்கும் விசுவாசத்துக்கும் அமைய சரியானவை என உண்மையாக உறுதிமொழிகிறேன். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ள இலங்கைக் கடற்படைக்குத் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரிகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை முறைகளையும் அவர்கட்குப் பொருத்தமான விதிமுறைகளையும் நான் நன்கு வாசித்துப் புரிந்து கொண்டேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

6-769

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள அரசாங்க முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை ஆளணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2018 (2019)

2019.05.10 ஆந் திகதியன்று அரசாங்க வர்த்தமானி இல. 2126 இல் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்ட, "வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களில் உள்ள அரச முகாமைத்துவ உதவியாளர்கள் சேவை ஆளணியில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கான போட்டிப் பரீட்சை - 2018 (2019)" என்ற வர்த்தமானி அறிவிப்பின் 3.2.3 மற்றும் 5.4 ஆம் பந்திகளில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

3.2.3 ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40 விகிதமான அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று, மொத்தம் 150 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றும் பரீட்சார்த்திகள் செயன்முறை மதிப்பீடு மற்றும் வாய்மொழித் தேர்வுக்கு அழைக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்களாவர். ஆனபோதிலும், மேற்படி வெட்டுப் புள்ளிக்கமைவாக, போதிய எண்ணிக்கையிலான தகுதி படைத்த பரீட்சார்த்திகள் இல்லாதிருக்கும் பட்சத்தில், வெட்டும் புள்ளியைத் தீர்மானிக்கும் உரிமையை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர் தன்னகத்தே கொண்டுள்ளார். செயன்முறை மதிப்பீடு மற்றும் வாய்மொழித் தேர்வுக்குத் தோற்றுவதற்குத் தகுதிபெறும் பரீட்சார்த்திகள் இறுதிப் பட்டியலுக்கென தெரிவு செய்யப்படுவதற்கு செயன்முறை மதிப்பீட்டிற்கென ஆகக் குறைந்தது 40 புள்ளிகளும் ($60 \times 40\% = 24$) மற்றும் வாய்மொழித் தேர்வுக்கு குறைந்தளவு வெட்டுப்புள்ளி இல்லை.

5.4 விண்ணப்பங்கள், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்குபடுத்தல் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள், பிரிவு, பரீட்சைத் திணைக்களம், த. பெ. இல. 1503, கொழும்பு" என்னும் முகவரிக்கு பதிவுத் தபாலில் 2019, யூன 28 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ கிடைக்கும்படியாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அத்துடன், கடிதக உறையின் இடது பக்க மேல் மூலையில் "வெளிநாட்டு இலங்கைத் தூதரகங்களில் அரச முகாமைத்துவ உதவியாளர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சை 2018 (2019)" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

ரவிநாத ஆரியசிங்க,
செயலாளர்,
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு.

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு 01,
2019, யூன் 21.

06-944

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.